# நமச்சிவாய புஜங்கம்

தர்மப்ரவசன ரத்னம், உத்தம உபன்யாசக சக்ரவர்த்தி
**பிரம்மஸ்ரீ மஞ்சகுடி கே. ராஜகோபால சாஸ்திரிகள்**

சிவஞான பூஜா மலர் - குரோதன ஆண்டு - (1985)
பிரசுரம்: **ஆங்கீரஸ s. வேங்கடேச சர்மா**, மேலமாம்பலம், சென்னை - 600 033]

**நமச்சப்தமாத்ரே ஸதாதுஷ்டதேவம்**
**நதாநாம்முனீனாம் ஹ்ருதிஸ்தம்கிரீசம்,**
**நரேந்த்ராதிபத்யம் ததந்தமவஹந்தம்**
**நமச்சிவாயேதி பதாபிதம்ஸ்துவே.** 1

1. ‘நம’ என்றதும் ஸந்தோஷமடையும் தெய்வம், வணங்குமின்ற முனிவர்களின் உள்ளத்தில் இருந்து, ராஜ்யத்தைக் கொடுத்தும் வஹித்தும் வரும் கிரீசனான சிவபெருமானை ‘**நமச்சிவாய**’ என்ற பதத்தினால் அழைத்து ஸ்துதி செய்கின்றேன்.

**மஹாதேவமீசம் மஹாவாக்ய்கேஹம்**
**மஹாத்மானமேகம் மஹத்தத்வமூர்த்திம்**
**மஹாருத்ரயஜ்ஞை: ஸதாஸ்தூயமானம்**
**நமச்சிவாயேதி பதாபிதம்ஹுவே.** **2**

2. மஹாதேவன், ஈசன் மஹாவாக்யத்தையே உறைவிடமாகக் கொண்ட மஹாத்மா, ஒரே கடவுள், மஹத் தத்வமுடைய மூர்த்தி, மஹாருத்திரங்களினால் எப்பொழுதும் துதிக்கப்படுகிறவர் ஆகிய சிவபெருமானை ‘**நமச்சிவாய**’ என்ற பதத்தினால் அன்போடு அழைக்கின்றேன்.

**சிவம்சாந்தமூர்த்திம் சிஷ்டைகபூஜிதம்**
**ச்ரிதாங்க்ரிஸ்வபக்தான் ஸதைவாபிரக்ஷம்**
**ச்ரியம்ஸந்த்தானம் சிலாரூபமாத்யம்**
**நமச்சிவாயேதி பதாபிதம்நமே.** **3**

3. சிவன், சாந்தமூர்த்தி, சிஷ்டர்களால் பூஜிக்கப்ப்டுபவர், தனது பாதத்தை யண்டினவர்களை எப்போதும் ரக்ஷிப்பவர், ஐச்வர்யட்தைக் கொடுப்பவர்,

சிலாரூபமாகத் தோன்றினாலும் ஆதிரூபமில்லாதவர். இத்தகைய சிவபெருமானை '**நமச்சிவாய**' என்று சொல்லி வணங்குவேன்.

**வாக்தேவதாஸ்தோத்ர த்ருப்தம்ச்ருதேர்கிராம்**
**பாரேவஸந்தம்யோகி ஹ்ருத்த்யேயமூர்த்திம்,**
**வகாராதிபீஜம் அம்ருதஸ்வரூபம்**
**நமச்சிவாயேதி பதாபிதம்ப்ருவே.** **4**

4. வாக்தேவதையான ஸரஸ்வதியின் ஸ்துதியினால் திருப்தி அடைந்தும், வேதத்தின் முடிவில் வஸித்தும், யோகிகளின் ஹ்ருதயத்தினால் தியானம் செய்யப்பட்டும், 'வ' என்ற அம்ருத பீஜமாக இருக்கும் சிவபெருமானை '**நமச்சிவாய**' என்று கூறுவேன்.

**யம்தேவதேவம் நமச் சப்தபூர்வம்**
**சிவாயேதிமந்த்ரம் தத்சிவாகாரமேதி,**
**சிதானந்தந்ருத்யம் ஸுதாதாத்ருசக்திம்**
**நமச்சிவாயேதி பதாபிதம்பஜே.** **5**

5. எந்த தேவதேவனை 'நம' என்று ஆரம்பித்து 'சிவாய' என்று மந்திரம் சொன்னவுடன் சிவஸ்ரூமாக ஆகி ஆனந்த நர்த்தனஞ் செய்யும் அம்ருதசக்தியைக் கொடுக்குமோ அந்த '**நமச்சிவாய**' மந்திரத்தை பஜிக்கிறேன்.

நமச்சிவாய புஜங்கம் உரையுடன் முற்றிற்று.